**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C)
**SPLCC.No.18/2025 - PW-33**

| | |
|---|---|
| Name | திருமதி.பிரபாவதி |
| Husband Name | கிருஷ்ணமூர்த்தி |
| Village /Area | குடியாத்தம் |
| Taluk | செதுக்கரை, வ.உ.சி தெரு |
| Occupation | ஓய்வு பெற்ற அரசு அலுவலர் |
| Age | 70 (11.11.55) |
| Religion | இந்து |
| Aadhar Card No. | 8588 2286 1084 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 13.11.2025.

**3 முதல் 10 மற்றும் 12, 15 எதிரிகள் ஆஜர். 11, 13 எதிரிகள் ஆஜர் இல்லை. பா.நா.சு.ச பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**

**முதல் விசாரணை –**

நான் வருவாய் துறையில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து, பணி ஓய்வு பெற்று, தற்போது குடியாத்தத்தில் வசித்து வருகிறேன். நான் ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்தில் தலைமையிடத்து துணை வட்டாட்சியராக 2008, 2009ம் ஆண்டுகளில் பணிபுரிந்தேன். 2011ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இருந்து நான் குடியாத்தம் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்தேன். தலைமையிடத்து துணை வட்டாட்சியரின் பணிகள் வருகைபதிவேடு பராமரிப்பது மற்றும் வட்டாட்சியரின் அனைத்து பணிகளையும் கவனிப்பது ஆகும். நான் பிறப்பு, இறப்பு சான்றிதழ், சிட்டா நகல் ஆகிய ஆவணங்களில் கையெழுத்து போடுவேன். ஒரு நபருக்கு சிட்டா நகல் வேண்டுமென்றால் அவர் தாலுக்கா அலுவலகத்தில் உள்ள கவுண்டரில்

விண்ணப்பங்கள் கொடுக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பம் வந்தால் அவற்றை உதவியாளர் வருவாய் ஆவணங்களை பார்வையிட்டு, சரிபார்த்து அதற்கு கட்டணம் ரூ.20 செலுத்திய பிறகு சிட்டா நகல் கொடுப்போம். அவ்வாறு சிட்டா நகல் கொடுப்பதை சிட்டா நகல் பதிவேட்டில் பதிவு செய்து, உதவியாளர் என் பார்வைக்கு கையெழுத்திற்காக வைப்பார். நான் அந்த சிட்டா நகலை பார்வையிட்டு, சரிபார்த்து கையெழுத்து போடுவேன். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் என்ன விசாரித்தார் என்றால், எனக்கு நினைவில்லை. இந்த வழக்கு பற்றி எனக்கு வேறு எதுவும் தெரியாது.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி, அனுமதி வழங்கப்படுகிறது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் என்னை விசாரித்த போது, குப்பிடிசாத்தம் கிராமத்தை சேர்ந்த கந்தசாமி என்பவரின் மகன் பெருமாள் என்பவரின் சிட்டா பிரதியை பார்வையிட்ட போது அந்த சிட்டா போலியாக தயாரிக்கப்பட்டது என்றும், அதில் அலுவலக மென்பொருள் மூலம் எடுக்கப்படும் கணினி சிட்டாவில் நாள், நேரம் மற்றும் அலுவலக மென்பொருள் Code போன்றவை இருக்கும் என்றும், காவல் ஆய்வாளர் என்னிடம் காட்டிய சிட்டாவில் அப்படி எதுவும் இல்லை என்றும், அதனால் அந்த சிட்டா போலியானது என்று உறுதியாக சொன்னேன் என்றால், சரிதான். மேலும், அந்த சிட்டா நகலுக்கான விண்ணப்ப மனுவினை

அலுவலகத்தில் தேடி பார்த்ததில் அவை பதிவறையில் கிடைக்கவில்லை என்று சொன்னேன் என்றால், சரிதான்.

**குறுக்கு விசாரணை 3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பில் –**

கந்தசாமி மகன் பெருமாளின் சிட்டாவில் கையெழுத்திட்டுள்ள பாண்டுரங்கன் என்பவரை எனக்கு தெரியும், அவர் என்னுடன் பணிபுரிந்துள்ளார். அவர் எந்த தேதியில் இந்த சிட்டாவை கொடுத்தார் என்று அதில் தேதி இல்லை என்றால், சரிதான். அந்த சிட்டாவை எனக்கு முன்னர் பாண்டுரங்கன் கொடுத்திருக்கலாம் என்றால், கொடுத்திருக்கலாம் என்று சாட்சி கூறுகிறார். பெருமாள் தன் மனுவோடு இணைத்து கொடுத்துள்ள கிராம நிர்வாக அதிகாரியால் வழங்கப்பட்ட அடங்கலில் உள்ள நில விஸ்தீரணமும், சர்வே எண்ணும், பட்டா எண்ணும் துணை வட்டாட்சியர் பாண்டுரங்கன் என்பவரால் வழங்கப்பட்ட சிட்டாவில் உள்ள அளவும் ஒன்றுதான் என்றால், சரிதான். சிட்டாவில் தேதி, நேரம் உள்ள விவரம் எப்போதில் இருந்து வழங்கப்படுகிறது என்று எனக்கு நினைவில்லை. சிட்டாவில் தேதி, நேரம் இல்லாததால்தான் அந்த சிட்டா போலியானது என்று நான் சொல்கிறேன் என்றால், சிட்டாவில் அலுவலக எழுத்தரின் சுருக்கெழுத்தும், அலுவலக கோபுர முத்திரையும் இல்லை. தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆள்பற்றாக்குறையால் சிட்டா கோரும் மனுக்களை சரியாக அடுக்க இயலாததால் அந்த மனுவினை ஆய்வாளர் கேட்ட போது பதிவறையில் இருந்து எடுத்து கொடுக்க முடியவில்லை என்றால், சரிதான். பெருமாள் விண்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள கிராம நிர்வாக அதிகாரியால்

வழங்கப்பட்டுள்ள 1417ம் பசலியின் அடங்கல் கணக்கு நகல் சரியானதுதான். அதனால் சிட்டா நகல் சரியானது என்றால், அது தவறு. என் உடன் பணிபுரிந்த அதிகாரி பாண்டுரங்கன் முன்பு கொடுத்த சிட்டா சரியானதுதான் என்றாலும், நான் சிட்டா நகல் கொடுக்கும் காலத்தில் நடைமுறையில் இருந்த நாள், நேரம் ஏற்கனவே கொடுத்த சிட்டா நகலில் இல்லாததால் அது போலியானது என்று சொல்கிறேன் என்றால், அது சரியல்ல. என்னை வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீசார் ஆவணங்களை காண்பித்து விசாரித்தார்களா என்றால், எனக்கு நினைவில்லை. ஆனால், விஜிலென்ஸ் போலீசார் என்னை விசாரித்தார்கள். எந்த வழக்கு சம்மந்தமாக என்னை விஜிலென்ஸ் போலீசார் விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை.

**குறுக்கு விசாரணை 12, 15 எதிரிகள் தரப்பில் –**

3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக வழக்கறிஞர் தெரிவித்தார்.

**மறு விசாரணை –**

இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet